# பணிப்பாளர் பதவி

## தொழில்நுட்ப நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் பதவியை நிரப்புவதற்கு 01.01.2024 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருப இலக்கம் 01/2024 இற்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பல்கலைக்கழக அமைப்பு அல்லது அதற்கு அப்பால் தகுதி பெற்ற இலங்கை பிரசைகள் இதற்காக விண்ணப்பிக்க தகுதி பெறுவதோடு, விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் திகதிக்கு 63 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை மற்றும் அதற்கு இணையான தொழில்நுட்ப கற்கைகளை நடத்துவதற்கு 2000ஆம் ஆண்டு மார்ச் 07 ஆம் திகதிய உத்தரவுக்கு அமைய அமைக்கப்பட்ட இந்த நிறுவனம், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் இணை நிறுவனம் ஒன்றாகும்.

2000 இன் 03 ஆம் இலக்க மொரட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவன ஒழுங்குபடுத்தலுக்கு அமைய, பணிப்பாளர் நிறுவனத்தின் முழு நேர அதிகாரி என்பதோடு, தலைமை நிறைவேற்று அதிகாரி, கல்விசார் அதிகாரி மற்றும் கணக்கியல் அதிகாரியுமாவார். பதவிநிலையின் அதிகாரத்தின்படி நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் உறுப்பினர் மற்றும் பணிப்பாளர் சபையின் தலைவருமாவார். கல்வி மற்றும் நிர்வாக பணிகளை செயற்படுத்தல், முகாமைத்துவ சபையின் முடிவுகளை செயற்படுத்தல் மற்றும் நிறுவனத்தின் ஒழுக்கத்தை முன்னெடுத்தல் தொடர்பில் பணிப்பாளர் பொறுப்பாவதோடு, குறித்த அமைச்சு, பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் தொடர்புபட்டு செயற்படுதல் வேண்டும். பதவி நிலை, 03 ஆண்டுகள் அல்லது 65 வயது பூர்த்தியாகும் வரை ஆகிய இரு சந்தர்ப்பங்களில் முதலில் வரும் திகதி வரையாகும்.

**சம்பள அளவு :** U-AC 5 (II) Rs.198,280 - 13x4,850 - 261,330 p.m.

அலுவலக போக்குவரத்து வசதிகள், பொழுதுபோக்கு கொடுப்பனவு, பல்கலைக்கழக சேமலாப நிதியம் (15% தொழில் வழங்குநர் மற்றும் 10% பணியாளர்), ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் (3% தொழில் வழங்குநர்). சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி ஒன்றை வகிப்பதாயின் இதற்காக நியமிக்கப்பட்டால் அவர் பெறும் சம்பளம் வழங்கப்படுவதோடு பணிப்பாளர் பதவிக்கு உரிய மற்ற கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**கீழுள்ள ஆவணங்களுடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.**

1. பிறந்த திகதி உட்பட விண்ணப்பதாரரின் முழுமையான சுயவிபரக் கோவை (உறுதி செய்யப்பட்ட பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்றை இணைத்தல் வேண்டும்)
2. நிறுவனத்தின் மேம்பாட்டுக்கான நோக்கு மற்றும் பதவிக்கு நியமிக்கப்பட்டால் விண்ணப்பதாரரினால் நிறுவனத்தின் மேம்பாட்டுக்கு மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் விடயங்கள் தொடர்பில் அறிக்கை ஒன்று
3. தற்போது அந்தப் பதவியில் உள்ள பணிப்பாளர் விண்ணப்பதாரராயின் அல்லது இதற்கு முன்னர் நிறுவனத்தில் பணிப்பாளர் பதவி வகித்திருந்தால், அவர் முதல் பதவிக் காலத்தில் மேற்கொண்ட பணிகள் தொடர்பில் விபரிக்கும் அறிக்கை ஒன்று.
4. விண்ணப்பதாரர் அரச துறை, கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை அல்லது உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றுபவராயின், குறித்த பதவிக்கு தேர்வு செய்யப்பட்டால் அவரை பணியில் இருந்து விடுவிக்க முடியும் என்பது தொடர்பில் தொழில் வழங்குநரின் கடிதம் ஒன்று.

2024.01.01 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 01/2024 ஆம் இலக்க சுற்றுநிருப அறிவுறுத்தலுக்கு அமைய தேர்வு நடைமுறை மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை 2026.09.10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு "பிரதிப் பதிவாளர், தொழில்நுட்ப நிறுவனம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம், தியகம, ஹோமாகம" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதோடு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பணிப்பாளர் பதவி" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அரச, கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவன தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். அது தவிர, மேலுள்ள ஆவணங்களின் மென் பிரதி ஒன்று மற்றும் வேறு தொடர்புடைய ஆவணங்களை PDF வடிவில் hr@itum.mrt.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு https://itum.mrt.ac.lk என்ற இணையதளத்தை பார்க்க முடியும்.

**பிரதிப் பதிவாளர்/ செயலாளர், முகாமைத்துவ சபை,**
**தொழில்நுட்ப நிறுவனம்,**
**மொரட்டுவைப் பல்கலைக்கழகம், தியகம, ஹோமாகம.**
**2026.08.09**